# மீனவர் நல மாநாடு நடத்தி -1000 கோடி ரூபாய் திட்டங்களை அறிவித்தவர் முதல்வர்!

## பேரவையில் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பதிலுரை... 7ஆம் பக்கத் தொடர்ச்சி

அடையாளப்படுத்தி அவர்கள் பராமரிக்கும் கால்நடைகளுக்கு சிறந்த கால்நடைக்கான சான்று வழங்கப்படும். இதன்மூலம் நல்ல தரமான கால்நடைகள் இனப்பெருக்கம் செய்யப்படுவது உறுதி செய்யப்படும்

22. கால்நடை வளர்ப்புத் தொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களை கால்நடை வளர்ப்போர் அறிந்துகொள்ள ஏதுவாக கால்நடை விவசாயிகளுக்கு “கால்நடை பராமரிப்பு தொழில் நுட்ப பயிற்சி திட்டம்” 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்

23. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரிலுள்ள மாவட்ட கால்நடைப்பண்ணை ஒருங்கிணைந்த கால்நடை உற்பத்தி மையமாக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தரம் உயர்த்தப்படும்

24. தமிழ்நாட்டில் உள்ள ஏழ்மை நிலையில் வாழும் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், அவர்களை தொழில் முனைவோர்களாக ஆக்குவதற்கும் செம்மறி ஆடு/வெள்ளாடு வழங்கும் திட்டம் 50 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படும்.

25. தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற ஏழை, நிலமற்ற விவசாய தினக் கூலிப் பயனாளிகளுக்கு நாட்டின கோழிக் குஞ்சுகள் வழங்கும் திட்டம், 50 சதவிகித மானியத்தில் செயல்படுத்தப்படும்.

26. திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடம், 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்படும்.

27. ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடம் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்படும்.

28. விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கான உயர்நிலைப் பயிற்சி மையம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.

29. நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் நவீன உட்கட்டமைப்பு வசதிகள் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்.

30. கால்நடை விவசாயிகளுக்குக் கள அளவில் எதிர்கொள்ளும் பிரச்சினை களுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகள் வழங்க துறை அலுவலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய “கால்நடைத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் மேலாண்மைக் குழு” அமைக்கப்படும்.

31. கால்நடைத் துறையில் புதிய ஆராய்ச்சி முன்னெடுப்புகளை வெளிக்கொணரும் வகையிலும் அவற்றை வணிகரீதியில் மேம்படுத்தும் வகையிலும், மாணவர்கள், தொழில்முனைவோர் மற்றும் தொழில் துறையினர் மாநாடு (Students, Entrepreneurs and Industrialist) 50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

### மீன்வளம்

மீனவ மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்திவரும் திராவிட நாயகர், நமது முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை தொடர்பான எனது உரையை தொடங்குகிறேன்.

தமிழ்நாட்டு மீனவர்கள் எப்போதெல்லாம் முதலமைச்சர் அவர்களை சந்திக்க விரும்புகிறார்களோ, அப்போதெல்லாம் அவர்களை சந்தித்து, தாயுள்ளத்தோடு அவர்களுடைய கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, உடனடியாக அவற்றை நிறைவேற்றித் தந்து, மீனவர்களின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்து கொண்டிருக்கிறார், நம் முதல்வர் அவர்கள்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு, பல்வேறு உத்தரவுகளை வழங்கினார்கள். அந்தவகையில், கடலோரப் பகுதிகளில் மீன்பிடிப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கும், மீனவக் கிராமங்களைக் கடலரிப்பிலிருந்து காப்பதற்கும் எங்கெல்லாம் புதிய கட்டமைப்புகள் தேவையோ, அந்தப் பகுதிகளை ஆய்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, பல்வேறு மீனவக் கிராமங்களில் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டம் பழையாறு, தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் மற்றும் ஆற்காட்டுத்துறை, தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல, பாரம்பரிய நாட்டுப் படகு மீனவர்களின் பயன்பாட்டிற்காக 37 மீனவக் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### மீன் பிடித் துறைமுகங்கள்!

மேலும், தமிழ்நாட்டில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்துவதற்கும், புதிய துறைமுகங்கள் அமைப்பதற்கும் முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தவகையில், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி, தருவைக்குளம், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் ஆகிய துறைமுகங்களை மேம்படுத்தவும், கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதிகளில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைப்பதற்கும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வறிக்கைகளின் அடிப்படையில், உரிய அனுமதிகளைப் பெற்று, முதலமைச்சர் அவர்களின் உரிய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பணிகளை நிறைவேற்றுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காலநிலை மாற்றத்தால் தமிழ்நாட்டின் பெரும்பாலான கடலோரக் கிராமங்கள் கடலரிப்பினால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. இந்தப் பாதிப்பிலிருந்து மீனவக் கிராமங்களைப் பாதுகாக்க வேண்டியது, மிகவும் அவசியமான ஒன்று. அதன்படி, மீனவக் கிராமங்களில் கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் போன்றவை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு எதிராக தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட வழக்கில், கடலில் கடினமான கட்டுமான பொருட்களைக் கொண்டு அலை தடுப்புச் சுவர்கள் மற்றும் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளக் கூடாது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கடற்கரைப் பகுதியில் கடலோர மேலாண்மை திட்டம் ஒன்று தயாரித்து ஒப்புதல் பெறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு, கடலோரப் பகுதிகளில் கட்டமைப்புகளை மேற்கொள்வதற்கு, பல்வேறு சவால்கள் மற்றும் இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், மீனவ மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே உன்னத நோக்கத்தோடு, முதலமைச்சர் அவர்கள் அவற்றையெல்லாம் விரைவில் நிவர்த்தி செய்து, பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள்.

மீனவர்கள்மீது மிகுந்த அக்கறையும், பற்றும் கொண்ட நமது முதலமைச்சர் அவர்கள், இந்திய துணைக் கண்டத்தில் எந்த வொரு முதலமைச்சரும் செய்யாதவகையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர் நல மாநாடு ஒன்றை நடத்தி, தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக சுமார் 1,000/- கோடி ரூபாய் அளவிற்கு திட்டங்களை அறிவித்து, அவற்றை உடனடியாக செயல்படுத்தி காட்டியது, மீனவர்களின் நெஞ்சத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு என்றும் நீங்காமல் நிறைந்திருக்கும்.

## மீனவ மக்களின் குறைகளை நிறைவு செய்து கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார் முதல்வர்!

#### மீனவர்களுக்குப் பட்டா!

அதிலும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், கடற்கரை கிராமங்களில் பல்வேறு திட்டங்கள்மூலம் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டி வழங்கப்பட்டன. ஆனால், இந்த வீடுகளுக்கு பட்டாக்கள் வழங்கப்படவில்லை. இதனால், மீனவர்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்தனர். இதனை அறிந்த முதலமைச்சர் அவர்கள் மீனவர் நல மாநாட்டில் அனைவருக்கும் பட்டா வழங்க ஆணையிட்டார்கள். இதன்பயனாக தற்போதுவரை 8 ஆயிரத்து 561 மீனவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கடலில் மீன்பிடித் தொழில் செய்துவரும் 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அந்த மாநாட்டிலே உத்தரவிட்டார்கள். மீனவர்களுக்கு வழங்கப்படும் மானிய விலை டீசல் மற்றும் மண்ணெண்ணையின் அளவினை உயர்த்தி வழங்கவும், முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மாநிலத்தில் உள்ள 4 ஆயிரத்து 307 விசைப் படகுகள் மற்றும் 18 ஆயிரத்து 654 நாட்டுப் படகுகள் இதன்மூலம் பயனடைகின்றன.

முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதிப்படி, மீன்பிடி குறைவு காலத்திற்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு நிவாரண நிதியை ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/-ஆகவும், மீன்பிடி தடைக் காலத்திற்கான நிவாரண நிதியை ரூ.5,000/-லிருந்து ரூ.8,000/- ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்விரு திட்டங்களுடன், மீனவர் மற்றும் மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணத் திட்டங்களையும் சேர்த்து கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 1,284 கோடியே

29 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக கடல்சார் மீனவ மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 4 இலட்சத்து 14 ஆயிரம் மீனவர் மற்றும் மீனவ மகளிர் இத்திட்டங்களில் பயன்பெறுகின்றனர்.

கடல் மீன்வளம் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டுவரும் இன்றைய சூழலில் மீன்வளத்தைப் பாதுகாத்து, பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பல்வேறு மீனவ கிராமங்களின் அண்மைக்கடல் பகுதியில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளில் 3 கோடி ரூபாய் செலவில் கடல் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

#### மீனவர்களுக்கு மானியம்!

மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் 4 ஆயிரம் நாட்டுப் படகு மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்கள்மூலம் 21 கோடியே 49 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடித் தொழிலுக்கு மாற்று வாழ்வாதாரமாக கூண்டுகளில் மீன் வளர்த்தல் மற்றும் கடற்பாசி உற்பத்தியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடற்பாசி உற்பத்தியில் நாட்டிலேயே, தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக திகழ்கிறது. முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டில் 127 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு கடற்பாசி பூங்கா ஒன்று அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. இராமநாதபுரம் மாவட்டம், வளமானூர் பகுதியில் கடற்பாசி விதை உற்பத்திக்கான கட்டமைப்புகளும், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பகுதியில் கடற்பாசியிலிருந்து பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யும் கட்டமைப்புகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்திட்டம் செயல்பாட்டுக்கு வரும்போது சுமார் 8 ஆயிரம் மீனவர் மற்றும் மீனவ மகளிர் பயனடைவார்கள். தமிழ்நாட்டில் பெருமழை, வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் மீட்புப் பணிகளில் மீனவர்களின் பங்கு மிகவும் போற்றுதலுக்குரியது. அந்தவகையில் கடந்த காலங்களில் சென்னை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்வதில் மீனவர்கள் மிகுந்த அர்ப்பணிப்போடு செயல்பட்டனர். மீனவர்களின் இந்த தன்னலமற்ற சேவையை அங்கீகரிக்கும் விதமாக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, சென்னையில் துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலும், தூத்துக்குடியில் பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலும், பாராட்டு விழா நடத்தி மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

இலங்கை கடற்படையால் இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் தொடர்ந்து கைது நடவடிக்கைக்கு உள்ளாவதைக் கண்டித்தும், ஒன்றிய அரசு இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியும், கடந்த மார்ச் 3 ஆம் தேதி இராமேஸ்வரம், தங்கச்சி மடத்தில் மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். இதை அறிந்த தமிழக முதலமைச்சர் அவர்கள் என்னையும், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களையும் போராட்டம் நடத்தும் மீனவர்களை சந்திக்க அறிவுறுத்தினார்கள். நாங்களும் அன்றையதினம் அவர்களை சந்தித்து, அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தோம்.

அவர்கள் எங்களிடம் தெரிவித்த கோரிக்கை என்னவென்றால், இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும். அதேபோல் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீன்பிடி படகுகளையும் விடுவிக்க வேண்டும். பாக் வளைகுடா பகுதியில் நாங்கள் அச்சமின்றி தொழில் செய்யவேண்டும் என்பதாகும். முதலமைச்சர் அவர்களும் இதே கோரிக்கைகளை வலியுறுத்திதான் ஒன்றிய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறார்கள். படகுகளை இழந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், சிறையில் உள்ள மீனவர்களுடைய குடும்பங்களை பேணி பாதுகாக்கவும், இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு சேதமடைந்த 278 மீன்பிடி படகுகளுக்கு ரூபாய் 13 கோடியே 58 இலட்சம் நிவாரணமாக வழங்கி முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். மேலும், விசைப்படகுகளுக்கு ரூபாய் 8 இலட்சமாகவும், நாட்டுப்படகுகளுக்கு ரூபாய் 2 இலட்சமாகவும், நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். அதேபோல அன்னிய நாட்டு சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கும் தினசரி நிவாரணத்தை 500 ரூபாயாக உயர்த்தி வழங்கவும் ஆணையிட்டார்கள்.

#### மீன்பிடி துறை முகம் தரம் உயர்வு!

மேலும், இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் நமது எல்லை பகுதியிலேயே நெடுந்தூரம் சென்று மீன்பிடிக்க ஏதுவாக ரூபாய் 360 கோடி மதிப்பீட்டில் தங்கச்சிமடம் மீன் இறங்குதளத்தை, மீன்பிடி துறைமுகமாக தரம் உயர்த்தவும், குந்துக்கல் மீன் இறங்கு தளத்தை, தூண்டில் வளைவுடன் மேம்படுத்தவும், பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கவும், முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக நமது மீனவர்களுக்கு அதிகபட்சமாக எந்த விதமான நிவாரண உதவிகளை செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மீனவர்கள் பிரச்சனையில் நல்ல ஒரு தீர்வு காண வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கும், ஒன்றிய அரசுக்குமே உள்ளது. கச்சத்தீவை மீட்பது ஒன்று தான் இதற்கான நிரந்தர தீர்வாக அமையும். இதை நன்கு அறிந்த முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் இதற்கென இந்த மாமன்றத்தில் அரசின் தனித்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு மீனவ மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

கடல்சார் மீனவர்களைப் போல, உள்நாட்டு மீனவர்களின் நலனை பேணிக்காப்பதற்கும் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு பல்வேறு உத்தரவுகளை வழங்கி இருக்கின்றார்கள். அந்தவகையில், உள்நாட்டு நீர்நிலைகளில் உரியநேரத்தில் தரமான மீன்குஞ்சுகள் இருப்பு செய்து மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் கடந்த ஆண்டு 10 கோடியே 12 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அரசு மீன் பண்ணைகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்திடஏதுவாக, அரசு சார்பில் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகள் அமைத்திடவும், தற்போதுள்ள மீன் பண்ணைகளை மேம்படுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 21 கோடியே 8 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அரசு சினை மீன் வங்கிகள் அமைத்தல், ஒருங்கிணைந்த நீர்தேக்க மீன்வள மேலாண்மை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மாநிலத்தின் மீன் உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. மீன்வளர்ப்போருக்கு தகுந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக புதிய நன்னீர் மீன் குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்தல், நன்னீர் மீன் குஞ்சு மற்றும் மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல், மீன்வளர்ப்பில் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் மீன் தீவன ஆலை அமைத்தல் ஆகிய பணிகளுக்கு 14 கோடியே 64 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆறுகளில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து உற்பத்தியை பெருக்கிடவும், நாட்டின மீன்களை பாதுகாக்கவும் ஒரு கோடியே 10 இலட்சம் மீன் குஞ்சுகள் காவேரி, பவானி மற்றும் தாமிரபரணி ஆறுகளிலும், அதன் கிளை ஆறுகளிலும் இருப்பு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் இந்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் முதன்முறையாக கடலூர்மாவட்டம், பரங்கிப்பேட்டை அரசு மீன் பண்ணையில் விலைமதிப்புமிக்க விரால் மீன்குஞ்சு உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு மீன்பிடி வலைகள் மற்றும் பரிசல்கள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கு கடந்த இரு ஆண்டுகளில் 2 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மீனவ கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்தும்பொருட்டு மீன்துறை கட்டுப்பாட்டிலுள்ள 62 நீர்தேக்கங்கள் மற்றும் 636 நீர்பாசனக் குளங்களில் மீன்பிடி உரிமையை மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மீனவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும்விதமாக, இரு சக்கர மீன் விற்பனை வாகனங்கள் வாங்கிட, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்மூலம் ஒரு கோடியே 58 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் வாயிலாக கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 20 ஆயிரம் மீனவர்களுக்கு 25 கோடியே 68 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வண்ண மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக சென்னை கொளத்தூர் பகுதியில் சர்வதேச தரத்திலான ஒரு வண்ண மீன் உற்பத்தி மையத்தை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு வண்ண மீன் உற்பத்தி மையம் அமைக்கும் பணிகள் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் மீன்வள மேம்பாட்டிற்காக தொழில்முனைவோர் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கிடையே கருத்து பரிமாற்றங்கள் மேற்கொண்டு, அதற்கேற்ப புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. சமூக நீதி காவலர் நம் முதலமைச்சர் அவர்கள் மீனவச் சமுதாய மாணவர்களுக்கு மீன்வள பல்கலைக்கழகத்தில் இளங்கலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பில் 5 சதவீதமாக இருந்த இட ஒதுக்கீட்டை 20 சதவீதமாக உயர்த்தியதன் விளைவாக தற்போதுவரை மீனவ சமுதாயத்தைச் சார்ந்த சுமார் 100 மாணவர்கள் இளங்கலை மீன்வள அறிவியல் பட்டப் படிப்பில் பயனடைந்துள்ளனர். அதிக வருவாயை ஈட்டக்கூடிய அயிரை மீன், விரால் மீன் மற்றும் நண்டு உற்பத்தியில் (மணியடிக்கப்பெற்றது) பல்வேறு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வணிக ரீதியில் இவற்றை உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இளம் தொழில்முனைவோருக்கு மீன்வளம் மற்றும் மதிப்பு கூட்டிய மீன் பொருட்கள் உற்பத்தியில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் தொழில் துவங்குவதற்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு மற்றும் இயந்திரம் பராமரிப்பு குறித்து பயிற்சி வழங்கி ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

நேற்றைய தினம், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.பி.சங்கர் , பாரதியார் நகரில் மீன்பிடி இறங்குதளம் அமைக்கவும், அங்கு கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கவும் திருவொற்றியூர் கூரை மீன்பிடி துறைமுகத்தில் அலைத் தடுப்புச்சுவரை கூடுதலாக 100 மீட்டர் நீட்டிக்கவும் கேட்டுக் கொண்டார்.

பாரதியார் நகரில் 5 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளம் ஒன்று அமைப்பதற்கு கடந்த 2024-2025 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அங்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைப்பதற்கும் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

#### திருவொற்றியூர் தடுப்புச் சுவர் நீட்டிப்பு!

திருவொற்றியூர் மீன்பிடித் துறைமுகத்தில் அலைத் தடுப்புச்சுவரை கூடுதலாக 100 மீட்டர் நீட்டிப்பது தொடர்பாகவும் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மீனவர்களின் உற்ற தோழனாக, அவர்கள் துயரங்களைத் துடைக்கும் தந்தையாக, அவர்கள் வாழ்வில் என்றும் ஒளியேற்றிக் கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள் இதுவரை எந்த மாநிலத்திலும், எந்த முதலமைச்சரும் செய்யாத அரிய பல திட்டங்களை மீனவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். உழைப்பின் சிகரமாய் விளங்கும் தளபதி அவர்களின் கரங்களை வலுப்படுத்தும் விதமாக, தமிழ்நாட்டு மீனவர்கள் என்றும் உறுதுணையாக இருப்பார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2025-26 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் அறிவிக்கிறேன்.

### அறிவிப்புகள்

1. மீனவ மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கு நுண்கடன் வழங்கிட ஏதுவாக 25 கோடி ரூபாய் மூலதனத்தில் “அலைகள்” திட்டம் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்படும்.

2. காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் வகையில் 16 கடலோர மீனவ கிராமங்கள் 32 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

3. மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி, கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டணம் மற்றும் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகங்கள் 45 கோடி ரூபாய் செலவில் “பசுமை மீன்பிடி துறைமுகங்களாக” மேம்படுத்தப்படும்

4. நாட்டின மீன் இனங்களை பெருக்கி பாதுகாத்திட 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் ஆறுகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும்

5. தரமான மீன் மற்றும் மீன் உணவு பொருட்களை நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்கிட, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தினால் “கயல்” திட்டம் தொடங்கப்படும்

6. பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களின் மீன்பிடித்திறனை மேம்படுத்திடும் வகையில் 2,000 வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்கள் வாங்கிட 10 கோடியே 80 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்

7. திருவள்ளூர் மாவட்டம், அவுரிவாக்கம் கீழ்குப்பம் மற்றும் வல்லம்பேடுகுப்பம் கிராமங்களில் புதிய மீன் இறங்குதளங்கள் 9 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்

8. செங்கல்பட்டு மாவட்டம், சதுரங்கப்பட்டினம் மீனவ கிராமத்தில் புதிய மீன் இறங்குதளம் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

9. மாநிலத்தின் முதல் அலங்கார தாய் மீன் வங்கி மற்றும் பயிற்சி நிலையம் மதுரை மாவட்டத்தில் 10 கோடி ரூபாய் செலவில்

10. மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் படகுகளுக்கு 200 செயற்கைக்கோள் தொலைபேசிகள் வாங்கிட 80 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்

11. கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மீனவ கிராமத்தில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம் 11 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்

12. மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் இருப்பு விவரம், விலை மற்றும் சந்தை நிலவரம் ஆகிய தகவல்களை பயனீட்டாளர்கள் தெரிந்துகொள்ள ஏதுவாக “இ-மீன்” வலைதள சேவை 50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்

13. மயிலாடுதுறை மாவட்டம், பெருமாள் பேட்டை மீனவர் கிராமத்தில் 4 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும்

14. தீவிர மீன் வளர்ப்பு முறையில் நீர்த்தேக்கங்களில் மிதவைக் கூண்டுகள் அமைத்து மீன் உற்பத்தியை அதிகரித்திடும் திட்டம் 7 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

15. திருநெல்வேலி மாவட்டம், பெருமணல் மீனவ கிராமத்தில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்

16. அலங்கார மீன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலை மேம்படுத்திட அலங்கார மீன் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும்

17. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மீன்வள கண்காட்சிகள் 74 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்

18. சாத்தனூர், மஞ்சளாறு, வைகை அணை, அகரம் உள்ளிட்ட அனைத்து அரசு மீன் விதைப்பண்ணைகள் 6 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்

19. நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் மாற்று முறை மீன்பிடிப்பினை ஊக்குவித்திட 200 நாட்டுப்படகு மீனவர்களுக்கு கணவாய் மீன்பிடி உபகரணங்கள் வாங்கிட 40 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்

20. நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி கிராமத்தில் கடல் அரிப்பு தடுப்பு பணிகள் 18 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

21. புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

22. மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை உறுப்பினர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் மீன் வளர்ப்பு உள்ளீட்டு மானியமாக வழங்கப்படும்

23. மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர், மீன்வளத்தில் நவீன தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் நோக்கில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

24. மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பில், நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளும் நோக்கில், துறை அலுவலர்களுக்கு 5 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புத்தாக்க மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும்

25. தூத்துக்குடி மாவட்டம், ஆலந்தலை மற்றும் அண்ணா காலனி மீனவ கிராமங்களில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள் 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்

26. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் டீசல் விநியோக நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு, “நிகழ்நேர மேலாண்மை அமைப்பு” 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்படும்

27. மீனவர்களுக்கு மீன்பிடி துறைமுக வளாகத்தில் டீசல் வழங்கிட ஏதுவாக தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் வாயிலாக மூன்று டீசல் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும்

28. அரசு மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்கு தரமான மீன் தீவனத்தை விநியோகிப்பதற்காக மீன் தீவன உற்பத்தி ஆலை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

29. சென்னை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று இடங்களில் “மீன் கழிவு மறுசுழற்சி ஆலைகள்” 45 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக நிறுவப்படும்

30. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் அனைத்து செயல்பாடுகளிலும் மின்னனு பணப் பரிவர்த்தனை வசதி 25 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்

31. சிறு, குறு மீன் விற்பனை யாளர்களுக்கான தொழில் முதலீட்டு உதவிகளை வழங்கி வணிக செயல்பாடுகளை ஊக்குவிக்கும் விதமாக, மீன் விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்படும்

32. மாநிலத்தின் மீன் உற்பத்திக்கு வலுசேர்க்கும் வகையில், தமிழ்நாட்டிற்கென ஒரு மீன் வகையினை மாநில மீனாக அடையாளம் கண்டு, அதன் உற்பத்தி மற்றும் மேம்பாட்டிற்கான திட்டம் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

33. புதிய மீன் இனங்களை மீன் வளர்ப்போரிடையே அறிமுகப்படுத்தி உற்பத்தியை பெருக்கும் விதமாக பாகு மீன் மற்றும் கொடுவா மீன் குஞ்சு உற்பத்தி மையங்கள் முறையே கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

34. சென்னை, மாதவரம், மீன் ஊட்டச்சத்து மற்றும் உணவு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மாணவ மாணவிகள் தங்கி பயிலுவதற்கு ஏதுவாக 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விடுதி உட்கட்டமைப்பு பணிகள் ஏற்படுத்தப்படும்

35. தமிழ்நாடு மீன்வள மாணவர்கள், தொழில்முனைவோர் பயன்பெறும் வகையில் தேசிய அளவிலான மீன்வள புத்தாக்கம் மற்றும் புத்தொழில் மாநாடு தொழில் துறை வல்லுநர்களின் பங்கேற்போடு 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்

36. மீன்வளம் சார்ந்த அனைத்து தொழில் முனைவோருக்கும் தேவையான தொழில்நுட்ப ஆலோசனை வழங்கி வழிகாட்டிட ஏதுவாக “மீன்வள தொழில்நுட்ப ஆலோசனை, மேம்பாடு மற்றும் மேலாண்மைக் குழு” அமைக்கப்படும்

37. சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த கடலோர மீனவ கிராமங்களில், உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள விரிவான தொழில் நுட்ப சாத்தியகூறுகளை ஆய்வு செய்திட ஏதுவாக 5 கோடி ரூபாய் “சுழல் நிதி” உருவாக்கப்படும்

குலத்திற்கு இலக்கணமாக விளங்கும் நமது முதலமைச்சர் தளபதி அவர்களுடைய சீரிய தலைமையில் நாங்கள் அயராது உழைப்போம் என்ற உறுதியை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மீன்வளம்-மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையில் அரசு அறிவித்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் அரசு செயலாளர்கள், டாக்டர் நா. சுப்பையன், அவர்களும், மீன்வளம்-மீனவர் நலம் துறையினுடைய ஆணையர் திருமதி. ஆர். கெஜலட்சுமி, கால்நடை பராமரிப்புத் துறையினுடைய இயக்குநர் ஆர். கண்ணன், மற்றும் துறை அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீன்வளம்-மீனவர் நலம் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகள் வைத்துள்ளார்கள். கால்நடைப் பராமரிப்பில் 175 வெட்டுத் தீர்மானங்களையும், மீன்வளம்-மீனவர் நலத் துறையில் 153 வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்துள்ளார்கள். இவற்றை முழுமையாகப் படித்துள்ளேன். இவற்றிற்கு முடிந்தவரை பதிலும் கூறியுள்ளேன். உறுப்பினர்களுடைய அனைத்துக் கோரிக்கைகளும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று முதல்வருடைய ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பதிலுரைத்தார்.